## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
## மேட்டூர் நகராட்சி

மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர் அவர்களால் 03.10.2018 ம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற உள்ளது.

### மன்றப் பொருள்

1) இந்நகராட்சியில் பொது சுகாதாரபிரிவு மற்றும் பொறியியல் பிரிவில் இயங்கி வரும் பேக்கோ போடர் வாகன எண்.TN27S2293 இன்ஜின் பழுது பணிக்கு ரூ.1.99 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 20.09.2018ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | லட்சுமி ஆட்டோ டீசல் ஓர்க்ஸ் மேட்டூர் | 1,98,000/– | – |
| 2 | J.V.K ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், சேலம் | 1,98,750/– | – |

***அலுவலக குறிப்பு:***

1. செலவினம் ரூ.1.99 இலட்சத்திற்கு வருவாய் நிதியிலிருந்து பணியினை மேற்க்கொள்ளலாம்.
2. அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் முன்னனுமதி பெற்று நகர்மன்ற அனுமதியினை எதிர் நோக்கி ஒப்பந்தபுள்ளி கோரியமைக்கு மன்றம் ஏற்கலாம்.
3. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளியாக ரூ.1,98,000/–யை என குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர் இலட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.
4. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலர் முன்னனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கப்பட்டதையும் மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.4985/2018/இ1)/

**தீர்மான எண். 177 நாள் 03.10.2018**

அனுமதிக்கப்பட்டது

2) இந்நகராட்சிக்குச் சொந்தமான IDSMT திட்டத்தில் கட்டப்பட்டு புகைவண்டி நிலைய தினசரி மார்க்கெட் கடைகளில் காலியாக உள்ள கடைகளுக்கு 19.09.2018ல் மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில், ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. கடை எண்.11க்கு மட்டும்

கீழ்க்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் கோரிய அதிகபட்ச தொகை (பிரதி மாத வாடகை) |
|---|---|---|
| 1. | திருமதி.ஜி.கவிதா,<br>க/பெ.எம்.கோவிந்தசாமி,<br>71, பெரியார் நகர்,<br>மேட்டூர் அணை. | ரூ.2000/- |
| 2. | திரு.எஸ்.ஆர்.கிருஷ்ணன்,<br>77/102, சின்னமாரியம்மன் கோவில் தெரு,<br>தங்கமாபுரிபட்டினம்,<br>மேட்டூர் ஆர்.எஸ். | ரூ.1500/- |

<u>அலுவலகக் குறிப்பு</u>

மேற்படி கடை எண்.11க்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள திருமதி.ஜி.கவிதா, மேட்டூர் அணை என்பவர் அதிகபட்சமாக மாதம் ஒன்றுக்கு வாடகையாக ரூ.2000/- க்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். இக்கடைக்கு இதுவரை சுமார் 54 முறை மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. இதுவரை ஏலமோ / ஒப்பந்தப்புள்ளியோ எவரும் கோரவில்லை. எனவே நகராட்சிக்கு தொடர்ந்து ஏற்பட்டு வரும் நிதியிழப்பை தவிர்க்கும் பொருட்டு, மேற்படி அதிகபட்சமாக வழங்கிய ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

**(ந.க.எண். 6232 /2006/அ3)/**

**தீர்மான எண். 178 நாள் 03.10.2018**

அனுமதிக்கப்பட்டது

3) மேட்டூர் நகராட்சிக்கு சொந்தமான இத்துடன் இணைக்கப்பட்ட கீழ்க்காணும் கடைகளின் உரிமக் காலம் 31.03.2017 உடன் 9 ஆண்டுகள் முடிவடைந்ததால், அரசாணை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.30.07.2007 ன்படி தற்போதைய சந்தை நிலவரத்திற்கு ஏற்ப குத்தகை தொகை மறு மதிப்பீடு செய்து இந்நகராட்சி அலுவலர் குழுவின் கள ஆய்வு அறிக்கையின்படி பொதுப்பணித்துறை மதிப்பீடு மற்றும் சந்தை மதிப்பீடு கணக்கிடப்பட்டு, சேலம் மண்டல நகராட்சிகளின் கண்காணிப்பு குழுவின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்பட்டது. தற்போது கண்காணிப்புக் குழுவின் ஒப்புதல் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம்

அவர்களின் செயல்முறைக்கடிதம் ந.க.எண்.4162/2016/அ4 நாள்.24.09.2018ல் பெறப்பட்டு சந்தை நிலவரத்திற்கு ஏற்ப கீழ்க்கண்டுள்ள விவரப்படி திருத்திய வாடகைத் தொகையை நிர்ணயம் செய்து வரப்பெற்றுள்ளது. அதன் விவரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | கடை எண். | அளவு | தற்போதுள்ள மாத வாடகை | கண்காணிப்புக் குழுவால் நிர்ணயம் செய்யப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 1 | 2 | 4 | 5 | 6 |
| 1. | IUDP கடை எண்.33 | “10 x 8” | 1854/- | 3000/- |
| 2. | MUDF கடை எண்.5 | “10 x 8” | 6225/- | 7500/- |
| 3. | IDSMT – R.S.கடை எண்.1 | “10 x 12” | 3353/- | 4200/- |
| 4. | IDSMT – R.S.கடை எண்.3 | “10 x 12” | 2777/- | 4200/- |
| 5. | IDSMT – R.S.கடை எண்.4 | “10 x 12” | 2712/- | 4200/- |
| 6. | IDSMT – R.S.கடை எண்.9 | “10 x 12” | 2804/- | 4200/- |
| 7. | IDSMT – R.S.கடை எண்.10 | “10 x 12” | 2659/- | 4200/- |
| 8. | IDSMT – R.S.கடை எண்.13 | “10 x 12” | 2712/- | 4200/- |
| 9. | IDSMT – R.S.கடை எண்.16 | “10 x 12” | 2712/- | 4200/- |
| 10. | IDSMT – R.S.கடை எண்.18 | “10 x 12” | 2712/- | 4200/- |
| 11. | IDSMT – R.S.கடை எண்.19 | “10 x 12” | 3379/- | 4200/- |
| 12. | IDSMT – R.S.கடை எண்.20 | “10 x 12” | 3509/- | 4200/- |
| 13. | IDSMT – R.S.கடை எண்.22 | “10 x 12” | 3342/- | 4200/- |
| 14. | IDSMT – R.S.கடை எண்.23 | “10 x 12” | 2997/- | 4200/- |
| 15. | IDSMT – R.S.கடை எண்.24 | “10 x 12” | 2777/- | 4200/- |
| 16. | IDSMT – R.S.கடை எண்.25 | “10 x 12” | 2698/- | 4200/- |
| 17. | IDSMT – R.S.கடை எண்.26 | “10 x 12” | 2659/- | 4200/- |
| 18. | IDSMT – R.S.கடை எண்.29 | “10 x 12” | 2712/- | 4200/- |

<u>அலுவலகக் குறிப்பு</u>

கண்காணிப்புக் குழுவால் மறு நிர்ணயம் செய்யப்பட்ட வாடகைத் தொகையை ஏற்றுக் கொள்ள அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 222 /2018/அ2)/**

**தீர்மான எண். 179 நாள் 03.10.2018**

அனுமதிக்கப்பட்டது

4) மேட்டூர் நகராட்சிக்கு சொந்தமான இத்துடன் இணைக்கப்பட்ட கீழ்க்காணும் கடைகளின் உரிமக் காலம் 31.03.2018 உடன் 9 ஆண்டுகள் முடிவடைந்ததால், அரசாணை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.30.07.2007 ன்படி தற்போதைய சந்தை நிலவரத்திற்கு ஏற்ப குத்தகை தொகை மறு மதிப்பீடு செய்து இந்நகராட்சி அலுவலர் குழுவின் கள ஆய்வு அறிக்கையின்படி பொதுப்பணித்துறை மதிப்பீடு மற்றும் சந்தை மதிப்பீடு கணக்கிடப்பட்டு, சேலம் மண்டல நகராட்சிகளின் கண்காணிப்பு குழுவின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்பட்டது. தற்போது கண்காணிப்புக் குழுவின் ஒப்புதல் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம்

அவர்களின் செயல்முறைக்கடிதம் ந.க.எண்.4162/2016/அ4 நாள்.24.09.2018ல் பெறப்பட்டு சந்தை நிலவரத்திற்கு ஏற்ப கீழ்க்கண்டுள்ள விவரப்படி திருத்திய வாடகைத் தொகையை நிர்ணயம் செய்து வரப்பெற்றுள்ளது. அதன் விவரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | கடை எண். | அளவு | தற்போதுள்ள மாத வாடகை | கண்காணிப்புக் குழுவால் நிர்ணயம் செய்யப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 1 | 2 | 4 | 5 | 6 |
| 1. | IDSMT – தென்புறம் கடை எண்.1 | “10 x 12” | 3973/- | 10000/- |
| 2. | IDSMT – தென்புறம் கடை எண்.2 | “10 x 12” | 10344/- | 12000/- |
| 3. | IDSMT – தென்புறம் கடை எண்.3 | “10 x 12” | 9062/- | 10500/- |
| 4. | IDSMT – தென்புறம் கடை எண்.4 | “10 x 12” | 7584/- | 9000/- |
| 5. | IDSMT – தென்புறம் கடை எண்.5 | “10 x 12” | 7952/- | 9500/- |
| 6. | IDSMT – தென்புறம் கடை எண்.6 | “10 x 12” | 9258/- | 11000/- |
| 7. | IDSMT – தென்புறம் கடை எண்.10 | “10 x 12” | 3968/- | 5500/- |
| 8. | IDSMT – தென்புறம் கடை எண்.12 | “10 x 12” | 17342/- | 19500/- |
| 9. | IDSMT – தென்புறம் கடை எண்.13 | “10 x 12” | 3703/- | 5500/- |
| 10. | IDSMT – தென்புறம் கடை எண்.14 | “10 x 12” | 5302/- | 6500/- |

<u>அலுவலகக் குறிப்பு</u>

கண்காணிப்புக் குழுவால் மறு நிர்ணயம் செய்யப்பட்ட வாடகைத் தொகையை ஏற்றுக் கொள்ள அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1977 /2018/அ2)/**

**தீர்மான எண். 180 நாள் 03.10.2018**

**அனுமதிக்கப்பட்டது**

**5)** இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தற்போது பெய்து வரும் பருவ மழையின் காரணமாக மேட்டூர் அணை நிரம்பி திறந்து விடப்படும் உபரி நீரால் **16**கண் பாலம் கால் வாய்களில் ஆங்காங்கே குளம்,குட்டைகளில் தண்ணீர் தேங்கியுள்ளதால் நகரில் உள்ள சாக்கடை மற்றும் கால்வாய்களில் தண்ணீர் தேங்கி மலேரியா, சிக்கன்குனியா மற்றும் டெங்கு காய்ச்சல்களை ஏற்படுத்தும் கொசுப்புழுக்கள் உருவாக்காமல் கட்டுப்படுத்த Bacillus Thvaingiensis Vax. Insorelensis Aqueous Suspension. Sevotype **414** ஆகிய மருந்துகளை **1** லிட்டர் ரூ.**1,474/–** வீதத்தில் **20** லிட்டர் மருந்துகளை M/S Sumitomo Chemical India(P) Ltd, Mumbai என்ற நிறுவனத்திடமிருந்து வாங்கி வழங்குமாறு துப்புரவு ஆய்வாளர் அவர்கள் **30.08.2018**ம் தேதி அறிக்கை சமர்பித்துள்ளார். ஆகவே, மேற்படி மருந்துகளை M/S Sumitomo Chemical India(P) Ltd, Mumbai அவர்களிடம் வாங்கிக் கொள்ளவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.**30000/–**ம் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. செலவுத் தொகை ரூ.30000/– ஐ பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.3667/2016/எச்1)**

**தீர்மான எண். 181 நாள் 03.10.2018**

அனுமதிக்கப்பட்டது

6) இந்நகராட்சிக்கு பொது சுகாதாரப்பிரிவிற்கு 2018–2019ம் ஆண்டிற்கு தேவைப்படும் தளவாடப் பொருட்களை சப்ளை செய்திட ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 20.07.2018ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்காணும் மூன்று ஒப்பந்தப் புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | பென்னாகரம் வட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் லிட், வண்ணாத்திபட்டி, மாங்கரை அஞ்சல், பென்னாகரம் | ரூ.4,34,616/– |
| 2 | ஊரக விரிவாக்க பயிற்சி நிலைய கூட்டுறவு பண்டக சாலை கே.கே.251, கிருஷ்ணகிரி அனை, கிருஷ்ணகிரி | ரூ.5,22,600/– |
| 3 | எஸ்.527 கெலமங்கலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் லிட், கெலமங்கலம், தேன்கனிக்கோட்டை | ரூ.5,61,470/– |

அலுவலக குறிப்பு:–

1. செலவினம் ரூ.5.00 இலட்சத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள, நகரமன்ற தீர்மானம் எண்.115 நாள்.02.07.2018இல் அனுமதிக்கப்பட்டுள்ளது.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மன்ற அனுமதியினை எதிர்நோக்கி வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை கொடுத்துள்ள வ.எண்.1ல் கண்டுள்ள பென்னாகரம் வட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் லிட், அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.3566/2018/எச்1)**

தீர்மான எண். 182 நாள் 03.10.2018

அனுமதிக்கப்பட்டது

7) மேட்டூர் நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டுத்திட்டம் 2018–2019ன் கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.12981/2018/E3 நாள்.09.07.2018ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட சர்ச்ரோடு மற்றும் பிரதான மேற்கு மெயின்ரோடு தார்சாலை பணியினை ரூ. 100.00 இலட்சத்திற்கு மேற்கொள்ள 20.09.18ல் முதன்முறை ஒப்பந்த புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி |
|---|---|
| 1 | திரு.R.மாதையன் ஒப்பந்ததாரர் செட்டிபட்டி, கொளத்தூர், மேட்டூர் |
| 2 | திருவாளர்.சின்னகண்ணு & கோ ஒப்பந்ததாரர், சின்னப்பம்பட்டி, ஓமலூர் |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளையும் இந்நகராட்சியின் ஒப்பந்த கூர்ந்தாய்வு குழு மூலம் கூர்ந்தாய்வு செய்ததில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்த புள்ளிகளும், தகுதி பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகள் ஆகும். ஆதலால், ஒப்பந்த புள்ளிகளின் விலைவிகித பட்டியல் 27.09.2018ல் திறக்கப்பட்டு அதன் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டு வைக்கப்பட்டுள்ளது

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|
| 1 | திரு.R.மாதையன் ஒப்பந்ததாரர் செட்டிபட்டி, கொளத்தூர், மேட்டூர் | 7.01% அதிகம் |
| 2 | திருவாளர்.சின்னகண்ணு & கோ ஒப்பந்ததாரர், சின்னப்பம்பட்டி, ஓமலூர் | 9.05% அதிகம் |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்த புள்ளியாக , மதிப்பீட்டை விட 7.01% கூடுதலாக வழங்கியுள்ள திருவாளர்.R.மாதையன், அவர்களுக்கு 27.09.2018ல் விலை குறைப்பு கடிதம் அனுப்பப்பட்டதில் ஒப்பந்ததாரர் தனது 29.09.2018ம் தேதிய கடிதத்தில் கீழ்கண்டவாறு சில இனங்களுக்கு விலைகுறைப்பு செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளார்.

| வ எண் | விவரம் | பழைய விலை | புதியவிலை |
|---|---|---|---|
| 2 | GSB | Rs.376.00 | Rs.325.00 |
| 4 | WMM | Rs.1667 | Rs.1580 |
| 9 | Manhole Raising | Rs.3270 | Rs.2450 |

அதன் அடிப்படையில் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில் மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தபுள்ளி மதிப்பீட்டை விட 4.96% கூடுதலாக உள்ளது. திருவாளர்.R.மாதையன் ஒப்பந்ததாரர் அவர்களுக்கு 01.10.2018ல் மீண்டும் விலைக்குறைப்பு செய்து தருமாறு கோரி கடிதம் அனுப்பப்பட்டதில் ஒப்பந்ததாரர் தனது 03.10.2018 கடிதத்தில் பெட்ரோலிய பொருட்களின் விலை உயர்வால் தார், சல்லி கற்கள் மற்றும் கட்டுமான பொருட்களின் விலையேற்றம் மற்றும் தொழிலாளர்களின் கூலி உயர்வு ஆகியவற்றின் காரணமாக தன்னால் மதிப்பீட்டை விட கூடுதலாக 4.96% வழங்கிய ஒப்பந்தபுள்ளி விகிதத்தை, குறைத்த தர இயலாது என தெரிவித்துள்ளார்.

அதன் அடிப்படையில் உள்ளூர் விலை விகிதத்தின்படி ஒப்புநோக்கியதில் மேற்படி விலைவிகிதம் உள்ளூர் மார்க்கெட் விலைவிகிதங்களை அனுசரித்துள்ளதால் திருவாளர்.R.மாதையன் ஒப்பந்ததாரர் என்பவர் மதிப்பீட்டை விட கூடுதலாக 4.96% அதிகமாக வழங்கிய ஒப்பந்தபுள்ளியை, பொறியியல் வழிகாட்டு நூலின் குறிப்புகளின்படி ஏற்க மன்றத்தின்அனுமதிக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்

**(ந.க.எண்.2650/2018/இ1)**

**தீர்மான எண். 183 நாள் 03.10.2018**

**அனுமதிக்கப்பட்டது**

8) இந்நகராட்சியின் பொன்னகர் நகராட்சி துவக்கப்பள்ளி வளாகத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள புதிய அங்கன்வாடி மையத்திற்கு புதியதாக குழந்தைகள் உபயோக கழிப்பிடம் அமைத்து அங்கன்வாடி மையத்திற்கு தண்ணீர் வசதி செய்யவும், மேலும் பொன்னகர் நகர் துவக்கப்பள்ளி கட்டடங்களில் மராமத்து பணிகள் மேற்கொள்ளவும் தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.4.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவுத்தொகையை நகராட்சியின் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண்.4813/2018/இ1)**

**தீர்மான எண். 184 நாள் 03.10.2018**

**அனுமதிக்கப்பட்டது**

9) மேட்டூர் நகராட்சியில் வளர்ச்சி பணிகள் குறித்து மாலைமலர் நாளிதழில் தொழில் மலர் 2018 – புத்தகமாக வெளியிடப்பட்டமைக்கு மாலை மலர் நாளிதழிருந்து பட்டியல் தொகை

ரூ.5000/— வழங்குமாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட தொகையினை மாலைமலர் நாளிதழ்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.5043/2018/இ1)**

**தீர்மான எண். 185 நாள் 03.10.2018**

அனுமதிக்கப்பட்டது

**10)** அரசு பொருட்காட்சி ஆகஸ்ட் **2018** முதல் செப்டம்பர் **2018** வரை சேலம் மாவட்டத்தில் நடைபெறுவதால் சேலம் மாவட்ட நகராட்சிகள் கலந்து கொள்ள வேண்டும் என **06.07.2018** அன்று சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அரசு பொருட்காட்சி நடத்துவது பற்றிய கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. மேலும் நகராட்சிகளால் நிறைவேற்றப்படும் ஏழை எளிய மக்கள் முன்னேற்றம் தொடர்பான விபரங்களை நலத்திட்டதின் அடிப்படை கட்டமைப்பு வசதி பொது சுகாதாரம் மற்றும் மகளிர் நலம் தொடர்பான உள்ளடக்கிய புகைப்படம் மற்றும் மாதிரி வடிவமைப்பு பொருத்தவும் அறிவுறுத்தப்பட்டது. எனவே மேட்டூர் நகராட்சியின் திட்டப்பணிகள் குறித்த புகைப்படங்கள் **24X36** அளவில் **4** எண்ணிக்கையாய் தயாரித்து லேமினேசன் செய்து பொருத்தவும் , உரம் தயாரிக்கும் இயந்திரங்களை வடிவமைப்பு செய்து பொருத்தியதற்கான செலவுத்தொகை ரூ.**21155/—** தனக்கு வழங்குமாறு இந்நகராட்சியில் உதவி பொறியாளர் திரு.S.பிரேமா அவர்கள் தெரிவித்துள்ளார்கள். மேற்கண்ட செலவுத்தொகை ரூ.21,115/— ஐ திருமதி. S.பிரேமா உதவிப் பொறியாளர்அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 4007 /2018/இ1)**

**தீர்மான எண். 186 நாள் 03.10.2018**

அனுமதிக்கப்பட்டது

**11)** இந்நகராட்சியில் தூக்கனாம்பட்டி துப்புரவு பணியாளர் குடியிருப்பில் (சி) பிளாக் — ல் Sintax Tank புதியதாக மாற்றுதல் பணிக்கு ரூ.**0.80** இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் **25.09.2018**ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | கோவிந்தன் பூசாரிப்பட்டி, ஓமலூர் சேலம் (மாவட்டம்), 9360006884 | — | 0.15% குறைவு |

| | | | |
|---|---|---|---|
| 2 | Ramasamy 8/37, பெரிய வனவாசி (P) மேட்டூர்(Tk), 9578625418 | – | 0.46% அதிகம் |

***அலுவலக குறிப்பு:***

1. செலவினம் ரூ.0.80 இலட்சத்திற்கு குடிநீர் நிதியிலிருந்து பணியினை மேற்க்கொள்ள அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர் நோக்கி தனிஅலுவலர் முன்னனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியமைக்கு மன்றம் ஏற்கலாம்.
3. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.15% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.கோவிந்தன் ,பூசாரிப்பட்டி, ஓமலூர் ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.
4. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலர் முன்னனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கப்பட்டமைக்கும் மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.4812/2018/இ1)**

**தீர்மான எண். 187 நாள் 03.10.2018**

அனுமதிக்கப்பட்டது

12) இந்நகராட்சிக்கு சொந்தமான Beard Sell Gardens Layout park, ஆதிபராசக்கி கோவில் தெருவில் உள்ள இடத்திற்கு முள் கம்பி வேலி அமைத்தல் பணிக்கு ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 10.08.2018ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | திருவாளர்M/s கிருத்திகா கான்ட்ரக்டர்ஸ், சேலம் கேம்ப், மேட்டூர் | – | 0.25% சதவீதம் மதிப்பீடு விகிதத்தை விட குறைவு |
| 2 | திருவாளர்C.P.சாமி & கோ , கோனூர் | – | 1.20% சதவீதம் மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

***அலுவலக குறிப்பு:***

1. மேற்கொண்ட பணிக்கு செலவினத்தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு பொது நிதியிலிருந்து பணியினை மேற்க்கொள்ள அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் முன்னனுமதி பெற்று மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தபுள்ளி கோரியமைக்கு மன்றம் ஏற்கலாம்.

3. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.25% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர் கிருத்திகா கன்ஸ்ட்ரக்சன்ஸ் சேலம் கேம்ப் ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.
4. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலர் முன்னனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.4002/2018/இ1)**

**தீர்மான எண். 188 நாள் 03.10.2018**

**அனுமதிக்கப்பட்டது**

ஆணையாளர் (ம) தனி அலுவலர்,
மேட்டூர் நகராட்சி

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
மேட்டூர் நகராட்சி

மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர் அவர்களால் 17.10.2018 ம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற உள்ளது.

மன்றப் பொருள்

1) இந்நகராட்சியில் பொறியியல் பிரிவில் பயன்படுத்தப்படும் வாகன எண்.TN52W4242 ன் புதிய பேட்டரி வாங்குதல் பணிக்கு ரூ.7300/– மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 25.09.2018ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் மூன்று விலை புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | Joseseph Battery works Mettur | Rs.7300/– | – |
| 2 | Power city Battery Works | Rs.7600/– | – |
| 3 | Auto Start exide batteries | Rs.7500/– | |

***அலுவலக குறிப்பு:***

5. செலவினம் ரூ.7300/– பொது நிதியிலிருந்து பணியினை மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
6. அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் முன்னனுமதி பெற்று நகர்மன்ற அனுமதியினை நிர்வாக அனுமதி கோரியமைக்கு மன்றம் ஏற்கலாம்.
7. வரப்பெற்றுள்ள மூன்று புள்ளிகளில் குறைந்த விலை புள்ளி விகிதத்தை விட ரூ.7300/– என குறைவாக விலைப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்.Joseseph Battery works Mettur ஒப்பந்ததாரரது விலைப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.
8. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன்னனுமதி பெற்று மன்ற அனுமதியினை எதிர்நோக்கி பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.5045/2018/இ1)/

தீர்மான எண். 189 நாள் 17.10.2018

அனுமதிக்கப்பட்டது

2) இந்நகராட்சியில் பொறியியல் பிரிவில் பயன்படுத்தப்படும் வாகன எண்.TN52W4242 AC பழுது பார்த்த பணிக்கு ரூ.13,300/– மதிப்பீட்டில் விலைப்புள்ளிகள் கோரியதில் 29.09.2018ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | M.M.Cars A/C works, Salem | Rs.11,300/– | – |
| 2 | See cool car A/C works, Salem | Rs.12,000/– | – |
| 3 | cool car A/C works, Salem | Rs.12,350/– | |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) செலவினம் ரூ.11300/– பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் ஏற்கலாம்.

2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன்னனுமதி பெற்று மன்ற அனுமதியினை எதிர்நோக்கி விலைப்புள்ளி கோரியமைக்கு மன்றம் ஏற்கலாம்.

3) வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் விலைப்புள்ளி விலை விகிதத்தை விட ரூ.11,300/– குறைவாக விலைப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர். M.M.Cars A/C works, Salem ஒப்பந்ததாரரது விலைப்புள்ளியினை மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.

4) அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் முன்னனுமதி பெற்று மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண். 5053 /2018/இ1)/**

**தீர்மான எண். 190 நாள் 17.10.2018**

அனுமதிக்கப்பட்டது

3) மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 25 இந்திரா நகர் கழிவு நீர் நீரேற்று அறையின் அருகில் மேட்டூர் அணையிலிருந்து அதிகப்படியான உபரி நீர் திறக்கப்படும் பொழுதும் மற்றும் மழைகாலங்களில் கனமழை பெய்யும் பொழுது அப்பகுதிகளில் உள்ள குடியிருப்புகளில் நீர் மருந்து சுகாதார சீர் கேட்பினை ஏற்படுத்துவதால் அப்பகுதிகளில் உள்ள சிறு பாலத்தின் தடுப்பு சுவற்றினை உயர்த்தவும் 3மீ நீளத்திற்கு தடுப்பு சுவர் அமைக்கவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.2.00 இலட்சம் ஆகும் மேற்கண்ட செலவினத்தை மேற்க் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்

2) இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்.

**(ந.க.எண்.5193/2018/இ1)**

**தீர்மான எண். 191 நாள் 17.10.2018**

அனுமதிக்கப்பட்டது

**4)** மேட்டூர் நகராட்சி வார்டு எண் **18** சின்னபார்க் என்றழைக்கப்படும் காமத் பூங்காவினை தன்னிறைவு திட்டம் **2018–2019** ன் கீழ் மரைமைத்தல் பணிக்கு மேற்க் கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேற்கண்ட பூங்காவிற்கு புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து தண்ணீர் வசதி ஏற்படுத்தி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.**4.80** இலட்சம் ஆகும். மேற்கண்ட செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) இதற்காகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்.

**(ந.க.எண்.5194/2018/இ1)**

**தீர்மான எண். 192 நாள் 17.10.2018**

அனுமதிக்கப்பட்டது

**5)** மேட்டூர் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் **2018–2019**ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் **7** வது உயர்மட்ட குழு கூட்டம் நாள்.**13.08.2018** ன் படியும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–**5** அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.**22866**/P3/**2018** நாள்.**23.08.2018**ன்படியும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட வார்டு B, பிளாக் எண்.**2**, நகரளவு எண்.**2** உள்ள உரக்கிடங்கில் நகராட்சி பகுதிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலிருந்தும் கடந்த **20** வருடங்களாக சேகரிக்கும் குப்பைகளை Techometric மூலம் அளவீடு செய்து **49823** Cum குப்பைகளை Bio Mining பணியினை செய்ய ரூ. **328.00** இலட்சத்திற்கு மேற்கொள்ள **04.10.18**ல் இரண்டாவது முறை ஒப்பந்த புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி |
|---|---|
| 1 | திருவாளர்.SHREE BOMMU INDUSTRIES COIMBATORE ஒப்பந்ததாரர் |
| 2 | திருவாளர். GREEN FINE EQUIPMENTS COIMBATORE ஒப்பந்ததாரர் |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளையும் இந்நகராட்சியின் ஒப்பந்த கூர்ந்தாய்வு குழு மூலம் கூர்ந்தாய்வு செய்ததில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்த புள்ளிகளும், தகுதி பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகள் ஆகும். ஆதலால், ஒப்பந்த புள்ளிகளின் விலைவிகித பட்டியல் **11.10.2018**ல் திறக்கப்பட்டு அதன் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டு வைக்கப்பட்டுள்ளது

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1 | திருவாளர்.SHREE BOMMU INDUSTRIES COIMBATORE ஒப்பந்ததாரர் | 7.76% அதிகம் |
| 2 | திருவாளர். GREEN FINE EQUIPMENTS COIMBATORE ஒப்பந்ததாரர் | 8.03% அதிகம் |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்த புள்ளியாக , மதிப்பீட்டை விட 7.76% கூடுதலாக வழங்கியுள்ள திருவாளர்.SHREE BOMMU INDUSTRIES COIMBATORE ஒப்பந்ததாரர் அவர்களுக்கு 11.10.2018ல் விலை குறைப்பு கடிதம் அனுப்பப்பட்டதில் ஒப்பந்ததாரர் தனது 13.10.2018ம் தேதிய கடிதத்தில் கீழ்கண்டவாறு சில இனங்களுக்கு விலைகுறைப்பு செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளார்.

| வ எண் | விவரம் | பழைய விலை | புதியவிலை |
|---|---|---|---|
| 1 | REMOVAL LEGASY WASTE | Rs.688.60/$m^3$ | Rs.670.50/$m^3$ |

அதன் அடிப்படையில் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில் மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தபுள்ளி மதிப்பீட்டை விட 4.93% கூடுதலாக உள்ளது. திருவாளர்.SHREE BOMMU INDUSTRIES COIMBATORE ஒப்பந்ததாரர்ர் அவர்களுக்கு 13.10.2018ல் மீண்டும் விலைக்குறைப்பு செய்து தருமாறு கோரி கடிதம் அனுப்பப்பட்டதில் ஒப்பந்ததாரர் தனது 15.10.2018 கடிதத்தில் தொழிலாளர்களின் கூலி உயர்வு மற்றும் இயந்திர தயாரிப்பு பொருட்கள் உயர்வு காரணமாக தன்னால் மதிப்பீட்டை விட கூடுதலாக 4.93% வழங்கிய ஒப்பந்தபுள்ளி விகிதத்தை, குறைத்த தர இயலாது என தெரிவித்துள்ளார்.

மேலும் இப்பணிக்கான முதல் அழைப்பிதழில் ஒப்பந்தபுள்ளிகள் ஏதும் வரவில்லை. இரண்டாவது ஒப்பந்தபுள்ளியில் வரப்பெற்ற இரு ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய திருவாளர்.SHREE BOMMU INDUSTRIES COIMBATORE ஒப்பந்ததாரர் என்பவர் மதிப்பீட்டை விட கூடுதலாக 4.93% அதிகமாக வழங்கிய ஒப்பந்தபுள்ளியை, பொறியியல் வழிகாட்டு நூலின் குறிப்புகளின்படி ஏற்க மன்றத்தின்அனுமதிக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்

**(ந.க.எண்.2299–6/2018/இ1)**

**தீர்மான எண். 193 நாள் 17.10.2018**

அனுமதிக்கப்பட்டது

ஆணையாளர் (ம) தனி அலுவலர்,
மேட்டூர் நகராட்சி

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
## மேட்டூர் நகராட்சி

**மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர் அவர்களால் 22.10.2018 ம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற உள்ளது.**

### மன்றப் பொருள்

**1)** அரசாணை எண் 73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.07.2018 மற்றும் அரசாணை எண் 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.26.07.2018 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண்.20555/2018/ஆர்1 ந.க.20.08.2018ம் தேதிய சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின் அறிவுரைகளின் படி இந்நகராட்சியில் சொத்துவரி பொது சீராய்வு 01.04.2018 முதல் மேற்கொள்ள நடைமுறையிலுள்ள சொத்துவரியை உயர்த்த இந்நகர்மன்றம் 10.09.2018ம் தேதிய 156 ம் எண் தீர்மானத்தில் அனுமதி வழங்கியதின் பேரில் 15.09.2018ம் தேதிய தினத்தந்தி தினசரி நாளிதழில் பொது மக்களின் தகவலுக்காக விளம்பரம் செய்யப்பட்டு ஆட்சேபனை ஏதும் இருப்பின் 30 நாட்களுக்குள் தக்க காரணங்களுடன் எழுத்து பூர்வமாக வழங்க கேட்டுக்கொள்ளப்பட்டது. சொத்துவரி உயர்வு செய்வது தொடர்பாக தினசரி நாளிதழில் பிரசுரிக்கப்பட்ட பின் ஆட்சேபணை ஏதும் பெறப்படவில்லை. எனவே பொது மக்களின் நலன் மற்றும் நகராட்சியின் நிதிநிலையினை கருத்திற்கொண்டு பொது சீராய்வு குறித்து அறிவிப்பினை சேலம் மாவட்ட அரசிதழில் பிரசுரிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.4152/2018/அ1)**

**தீர்மான எண். 194 நாள் 22.10.2018**

**அனுமதிக்கப்பட்டது**

2) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கலந்தாய்வு கூட்ட அறிவுரைகள் மற்றும் கூட்ட செய்தி நாள்.12.10.2018ம் தேதிய அறிவுரையின்படியும் அரசானை நிலை எண்.101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,(குப3) நாள்.30.04.1997ல் தெரிவிக்கப்பட்டுள்ள அளவுகோலின் படியும் கூடுதலாக தேவைப்படும் துப்புரவு பணியாளர்களை நியமிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கீழ்க்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) 101–ன் படி தேவைப்படும் மொத்த பணியாளர்களின் கணக்கீடு விபரம்

| வ. எண் | வேலை வகைப்பாடு | விபரம் | துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 250 குடியிருப்புகளுக்கு 3 நபர் வீதம் மொத்தம் 12,501 குடியிருப்புகளுக்கு | 12,501 / 250 X 3 | 150 நபர்கள் |
| 2 | பெரிய லாரி 4 நபர் வீதம் | 2 X 4 Nos | 8 நபர்கள் |
| 3 | சிறிய லாரி 3 நபர் வீதம் | 2 X 3 Nos | 6 நபர்கள் |
| 4 | டம்பர் பிளேசர் 2 நபர் வீதம் | 1 X 2 Nos | 2 நபர்கள் |
| 5 | காம்பாக்டர் லாரி 2 நபர் வீதம் | 1 X 2 Nos | 2 நபர்கள் |
| 6 | JCBக்கு 1 நபர் வீதம் | 1 X 1 Nos | 1 நபர்கள் |
| 7 | கழிவு நீர் ஊர்திக்கு 2 நபர் வீதம் | 1 X 2 Nos | 2 நபர்கள் |
| 8 | பேருந்து நிலைய கழிப்பறையை சுத்தம் செய்ய 1 நபர் வீதம் | 1 X 1 Nos | 1 நபர்கள் |
| 9 | பேருந்து நிலையத்தினை சுத்தம் செய்ய C கிரேடு 2 நபர் வீதம் | 1 X 2 Nos | 2 நபர்கள் |
| 10 | 10 லட்சம் வரை வருமானம் வரக்கூடிய நகராட்சி அங்காடியையும் மற்றும் அங்குள்ள கழிப்பறையை சுத்தம் செய்ய கூடுதல் வருமானம் ஒவ்வொரு பத்து இலட்சத்திற்கும் கூடுதல் பணியாளர்கள் 4 நபர் வீதம் | 1 X 4 Nos | 4 நபர்கள் |

| | | | |
|---|---|---|---|
| 11 | உரக்கிடங்கு பராமரிப்பு 20 மெட்ரிக் டன் குப்பை சேரும் இடத்திற்கு 2 நபர்கள் வீதம் (மொத்தம் 19.50 டன்கள்) | 1 X 2 Nos | 2 நபர்கள் |
| | **தேவைப்படும் மொத்த பணியாளர்கள்** | | **180 நபர்கள்** |

<u>**அரசாணை 101ன் படி தேவைப்படும் பற்றாக்குறை கூடுதல் பணியாளர்கள் கணக்கீடு விபரம்**</u>

| வ. எண் | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | அரசாணை( நிலை) எண்.101 , நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.30.04.1997ன் படி தேவைப்படும் மொத்த துப்புரவு பணியாளர்கள் எண்ணிக்கை | 180 நபர்கள் |
| 2 | அனுமதிக்கப்பட்ட நிரந்தர துப்புரவு பணியாளர்களின் பணியிடங்களின் எண்ணிக்கை | 165 நபர்கள் |
| 3 | தற்போது பணியில் உள்ள நிரந்தர துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | 81 நபர்கள் |
| 4 | தனியார் ஒப்பந்த துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.31096/பி3/2017 நாள்.10.01.2017 | 47 நபர்கள் |
| 5 | பணியில் உள்ள மொத்த துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை (தனியார் மற்றும் நிரந்தரம்) (81 + 47) | 128 நபர்கள் |
| 6 | கூடுதலாக தேவைப்படும் துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை (180–128) | 52 நபர்கள் |

மேற்கண்ட அரசாணையின்படி திடக்கழிவு மேலாண்மை பணிகளை திறம்பட செய்வதற்கு உத்திரவின்படி அனுமதிக்கப்பட்ட 165 துப்புரவு பணியாளர்களில் 47 பணியாளர்கள் தனியார் மூலம் பணி செய்து வந்தனர். தற்போது அரசாணை 101–ன்படி தேவைப்படும் கூடுதல் துப்புரவு பணியாளர்கள் 52 நபர்களை சேர்த்து (47+52=99) தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் (Out sourcing)செய்து அரசு உத்தரவின்படி பொது சுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி நியமித்துக்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் மூலமாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற கருத்துரு தயார் செய்து அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. பொது சுகாதாரம் மற்றும் தூய்மை இந்தியா திட்டத்தின் நோக்கங்களை கருத்தில் கொண்டு மன்றம் அனுமதிக்கலாம்.
2. ஏற்படும் செலவினத்தினை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பயனீட்டாளர் கட்டண நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்

**(ந.க.எண்.3601/2018/எச்1)**

**தீர்மான எண். 195 நாள் 22.10.2018**

**அனுமதிக்கப்பட்டது**

**3)** இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளில், கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் மூலம் வீடு வீடாக சென்று தண்ணீர் தொட்டிகளில் அபேட் மருந்து தெளித்தல் மற்றும் டெங்கு கொசுப்புழு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அழித்தல் பணிக்கு டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் , நகரமன்ற தீர்மானத்தின்படி **01.07.2018** முதல் **30.09.2018** முடிய **40** நபர்களை கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், சேலம் அவர்களால் வாரந்தோறும் திங்கட்கிழமை நடத்தப்பெறும் ஆய்வுக்கூட்டத்தில் டெங்கு மற்றும் காய்ச்சல் தொடர்பாக டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்களை

பயன்படுத்துதல் மற்றும் கொசுப்புகை மருந்து அடித்தல் போன்ற தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுரை வழங்கப்பட்டது என்றும் **01.10.2018** முதல் மேலும் மூன்று மாதங்களுக்கு 40 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை தற்காலிகமாக தினக்கூலி அடிப்படையில் ரூ.200/– வீதத்தில் ஸ்ரீகுமரன் மகளிர் சுய உதவிக்குழு, நவரத்தினம் மகளிர் சுய உதவிக்குழு மற்றும் பனிமலர்கள் மகளிர் சுய உதவிக்குழு மூலம் அமர்த்திக்கொள்ள துப்புரவு ஆய்வாளர் தனது **01.10.2018** ஆம் தேதிய அறிக்கையில் தெரிவித்துள்ளார். எனவே துப்புரவு ஆய்வாளரின் அறிக்கையின் படியும், பொது சுகாதார நலன் கருதியும், டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைள் தீவிரமாக மேற்க்கொள்ளும் பொருட்டும், கொசுப்புழு ஒழிப்பு பணிகள் மேற்க்கொள்ள **01.10.2018** முதல் **31.12.2018** முடிய மூன்று மாதங்களுக்கு தற்காலிகமாக 40 DBC பணியாளர்களை <DOMESTIC BREEDING CHECKERS> தினக்கூலி ரூ.200/– வீதம் ஸ்ரீ குமரன் மகளிர் சுய உதவிக்குழு மற்றும் பனிமலர்கள் மகளிர் சுய உதவிக்குழு ஆகிய மூன்று குழுவின் மூலம் பயன்படுத்திக்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.7,20,000/– க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) இதற்காகும் செலவினத் தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.758/2018/எச்1)**

**தீர்மான எண். 196 நாள் 22.10.2018**

அனுமதிக்கப்பட்டது

**4)** இந்நகராட்சியில் பொறியியல் பிரிவில் இயங்கி வரும் வாகன எண்TN.52W4242– ன் செல்ப் மோட்டார் டைனமோ பழுதாகியுள்ளதால் பழுதடைந்து செல்ப் மோட்டார் டைனமோ சரி செய்ய செலவினத் தொகை ரூ.6400/– ஆகும். மேற்கண்ட தொகையினை ஓட்டுநர் திரு.K.பெரியநாயகம் செலவு செய்தமைக்கு அன்னாருக்கு திரும்ப ரூ.6400/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

*<u>அலுவலக குறிப்பு:</u>*

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை பொது நிதியிருந்து வழங்கலாம்
3. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன்னனுமதி பெற்று மன்ற அனுமதியினை எதிர்நோக்கி திரு. K.பெரியநாயகம் அவர்களுக்கு வழங்குவதற்கு மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.5053/2018/இ1)**

**தீர்மான எண். 197 நாள் 22.10.2018**

அனுமதிக்கப்பட்டது

**5)** மேட்டூர் நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் எண்.TN27W0535 ன் வாகனத்தின் பழுதுகளை சரிசெய்து வாகனத்தின் தகுதிச் சான்றை

புதுப்பிக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.34000/– ஆகும் மேற்கண்ட செலவினத்தை மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்.

**(ந.க.எண். 4529/2018/இ1)**

**தீர்மான எண். 198 நாள் 22.10.2018**

அனுமதிக்கப்பட்டது

**6)** மேட்டூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு பயன்படுத்தப்பட்டு வரும் வாகன எண். TN27T7769 ன் வாகனத்தின் தகுதி சான்று புதுப்பித்து வாகனத்தின் உள்ள பழுதுகளை சரிசெய்தல் மற்றும் GPRS கருவிகளை பொருத்துதல் செலவினத் தொகை ரூ.68000/– ஆகும் மேற்கண்ட செலவினத்தை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்.

**(ந.க.எண். 5254/2018/இ1)**

**தீர்மான எண். 199 நாள் 22.10.2018**

அனுமதிக்கப்பட்டது

ஆணையாளர் (ம) தனி அலுவலர்,
மேட்டூர் நகராட்சி

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
மேட்டூர் நகராட்சி

மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர் அவர்களால் 29.10.2018 ம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற உள்ளது.

மன்றப் பொருள்

1) 1. Resolved that Mettur Municipality is authorizing the authorized signatory to borrow the interest free loan of **RS.200.77 Lakhs (** Rupees Two Hundred Lakhs and Seventy Seven Thousands only) from TUFIDCO for 'Provision of Internal Plumbing for HSC (Minimum **7000** Nos) for making optimum utilization of Water supply at Mettur Municipality ' under Resolving fund of UIDSSMT as per the terms and conditions prescribed by TUFIDCO.

2. The authorized signatory be and hereby authorized to execute the loan agreement and other documents if any with TUFIDCO and complete all the other formalities including affixing of the common seal of Mettur Municipality on the documents to be executed with TUFIDCO in behalf of Mettur Municipality.

3. Resolved to repay the interest free loan as per the repayment schedule in the agreement.

4. Resolved to adhere to time line as envisaged DPR.

5. Resolved that Mettur Municipality is authorizing the authorized signatory to make necessary budgetary provisions in Mettur Municipality's annual budget for the repayment of principal for the project proposals to TUFIDCO and is hereby confirmed that all dues will be paid in time without default for creation sustainable revolving fund.

6. Resolved that Mettur Municipality is authorizing the authorized signatory to open and operate an ESCRROW account for Water Supply on favour of TUFIDCO toll the repayment of Loan.

**Office Note**

May be accepted

**(Roc.No.686/2018/A5)**

**தீர்மான எண். 200 நாள் 29.10.2018**

அனுமதிக்கப்பட்டது

2) மேட்டூர் நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி துவக்கப்பள்ளி கட்டடங்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் பயன்படுத்தப்படும் கழிவறைகள் மராமத்து பணிகள் மேற்க்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ எண் | பள்ளியின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | தங்கமாபுரிபட்டிணம் நகராட்சி துவக்கப்பள்ளி | ரூ.4.80 இலட்சம் |
| 2 | தூக்கனாம்பட்டி நகராட்சி துவக்கப்பள்ளி | ரூ.4.20 இலட்சம் |
| 3 | பொன்னகர் நகராட்சி துவக்கப்பள்ளி | ரூ.4.50 இலட்சம் |
| 4 | குமரன் நகர், நகராட்சி துவக்கப்பள்ளி | ரூ.3.50இலட்சம் |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்.

**(ந.க.எண்.5442/2018/இ1)**

**தீர்மான எண். 201 நாள் 29.10.2018**

அனுமதிக்கப்பட்டது

**3)** இந்நகராட்சியில் பொறியியல் பிரிவில் இயங்கிவரும் TN52V4660 வாகனத்தின் டயர் புதிதாக மாற்றுத்ல் பணிக்கு 32500/– மதிப்பீட்டில் விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | SR.Wheel Aligners | Rs.31930/– | – |
| 2 | Parimalam Tyre Agencies | Rs.32390/– | – |
| 3 | Sri senthil Murugan Tyres | Rs.32990/– | |

***<u>அலுவலக குறிப்பு:</u>***

1. செலவினம் ரூ.31930/– பொது நிதியிலிருந்து பணியினை மேற்க்கொள்ள மன்றம் ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் முன்னனுமதி பெற்று மன்ற அனுமதியினை எதிர் நோக்கி விலைப்புள்ளி கோரியமைக்கு மன்றம் ஏற்கலாம்.
3. வரப்பெற்றுள்ள மூன்று விலை புள்ளிகளில் ரூ.31930/– என குறைவாக விலைப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர். SR.Wheel Aligners ஒப்பந்ததாரரது விலைப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

4. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன்னனுமதி பெற்று மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.4602/2018/இ1)/**

**தீர்மான எண். 202 நாள் 29.10.2018**

அனுமதிக்கப்பட்டது

**4)** மேட்டூர் நகராட்சியில் வார்டு எண் 23 கூலி லைன் பகுதியில் அமைந்துள்ள அங்கன்வாடி மையத்திற்கு குழந்தைகள் உபயோகப்படுத்துவதற்கு கழிப்பிட வசதி மற்றும் சுற்று சுவர் கட்டுவதற்கும் தண்ணீர் வசதி செய்து தரவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.3.90 ஆகும். மேற்கண்ட செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

***அலுவலக குறிப்பு:***

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்காகும் செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்.

**(ந.க.எண்.5441/2018/இ1)**

**தீர்மான எண். 203 நாள் 29.10.2018**

அனுமதிக்கப்பட்டது

**5)** மாவட்ட ஆட்சித்தலைவர், சேலம் அவர்களின் 06.10.2018 ஆம் தேதிய கடிதத்தில் சேலம் மாவட்டத்தில் அக்டோபர் 15ம் தேதி காலை 9.30 மணியளவில் உலக கை கழுவும் நாள் விழா கொண்டாடுமாறும், நகராட்சி பகுதியில் சில இடங்களில் நகராட்சி சார்பாக பேக்டிராப்ஸ், தண்ணீர், வாளிகள், சோப், ஆகியவற்றை ஏற்பாடு செய்து விழா சிறப்புற நடைபெற ஆவண செய்யுமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி இந்நகராட்சிக்குட்பட்ட 6 இடங்களில் கைகழுவும் நாள் விழா கொண்டாடப்பட்டது. அதற்காக FLEX பேனர்கள் அச்சடிக்கப்பட்டமைக்கான செலவுத்தொகை ரூ.4,900/—ஐ திரு.பா.நாசர் அவர்களுக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

***அலுவலக குறிப்பு:***

1. மேற்படி செலவுத்தொகை ரூ.4,900/ஐ வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.5437/2018/எச்1)**

**தீர்மான எண். 204 நாள் 29.10.2018**

அனுமதிக்கப்பட்டது

**6)** இந்நகராட்சிக்குச் சொந்தமான முனியப்பன் கோவில் பகுதி கட்டணக் கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு **23.10.2018**ல் மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில், ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. கீழ்க்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்.** | **ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளியில் கோரிய அதிகபட்ச தொகை (ஆண்டு ஒன்றுக்கு)** |
|---|---|---|
| 1. | திரு.எம்.ரகுநாதன்,<br>த/பெ.முத்துசாமி,<br>காளியம்மன் கோவில் பின்புறம்,<br>மேட்டூர் அணை. | ரூ.37,400/- |
| 2. | திரு.S.P & Co.,<br>2/222/B, பொன்னகர்,<br>மேட்டூர்அணை. | ரூ.30,100/- |

<u>அலுவலகக் குறிப்பு</u>

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் கண்டுள்ள திரு.எம்.ரகுநாதன், மேட்டூர்அணை என்பவர் அதிகபட்சமாக ஆண்டு ஒன்றுக்கு ரூ.37,400/-க்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். இந்த ஒப்பந்தப்புள்ளித் தொகையானது சென்ற ஆண்டை விட ரூ.8,073/- கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரியை விட ரூ.9,448/- கூடுதலாகவும் உள்ளது. எனவே இந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

**(ந.க.எண்.3928/2017/அ2)**

**தீர்மான எண். 205 நாள் 29.10.2018**

**அனுமதிக்கப்பட்டது**

7). இந்நகராட்சியில் **2016–2017** ஆம் ஆண்டுக்கான ஆண்டுக் கணக்குகளை தனியார் ஒருவரை நியமித்து கணினியில் தயார் செய்திட அவசர அவசியம் கருதி **31.07.2018** ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்.** | **விலைப்புள்ளி கொடுத்தவர் பெயர்** | **விலைப்புள்ளியில் வழங்கிய தொகை** |
|---|---|---|
| 1. | ஸ்ரீ மோனிசா கம்ப்யூட்டர்ஸ்,<br>237ஏ, முதல் தளம்,<br>முனியப்பன் கோவில் தெரு,<br>மாணிக்கம்பாளையம் ரோடு,<br>சூளை, ஈரோடு. | ரூ.50,000/- |
| 2. | திரு.தா.ராஜசேகர்,<br>அக்கவுண்ட் கன்சல்டன்ட்,<br>அறை எண்.23, டிசிஆர் காம்ப்ளக்ஸ்,<br>பெங்களூர் ரோடு,<br>கிருஷ்ணகிரி. | ரூ.40,000/- |
| 3. | லக்ஷயா இன்போடெக், | ரூ.45,000/- |

| | | |
|---|---|---|
| | நெ.11, ஸ்ரீ ராம் ஸ்போர்ட்ஸ் காம்ப்ளக்ஸ்,<br>கோபால் பிள்ளையார் கோவில் தெரு,<br>திருவண்ணாமலை. | |

<u>அலுவலகக் குறிப்பு</u>

மேற்படி வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.2–ல் கண்டுள்ள திரு.தா.ராஜசேகர், கிருஷ்ணகிரி என்பவரது விலைப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள தொகையானது குறைவாக உள்ளது. எனவே பணியின் அவசர அவசியம் கருதி குறைவான விலைப்புள்ளியை வழங்கிய திரு.தா.ராஜசேகர் என்பவரது விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கியமைக்கும், அதற்குரிய தொகையை வழங்குவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>ந.க.எண்.1297/2018/பி1</u>**

**தீர்மான எண். 206 நாள் 29.10.2018**

**அனுமதிக்கப்பட்டது**

ஆணையாளர் (ம) தனி அலுவலர்,
மேட்டூர் நகராட்சி.